# ஆண்கள், பெண்கள் மற்றும் வேதாகமச் சமத்துவம்

பரிசுத்த வேதாகமம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே முழு சமத்துவம் இருக்கிறது என்பதை படைப்பிலும், மீட்பிலும் நமக்குக் கற்பிக்கிறது (ஆதி1:26-28, 2:23; 5:1-2; 1கொரி11:11-12; கலா 3:13,28,5:1).

கடவுள், முழுவேதத்திலும், அதிகாரமுள்ள தேவ வார்த்தைகளிலும் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார். வேத வசனங்கள் ஒருமுகப்படுத்தப்பட்ட மற்றும் பொருள்சார்ந்த நிலையில் வியாக்கியானம் செய்யப்படவேண்டுமென நம்புகிறோம். அகத்தூண்டுதலுக்கும், வியாக்கியானத்திற்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அகத்தூண்டுதல் என்பது தெய்வீக துடிப்புக்கும், கட்டுப்பாட்டிற்கும் தொடர்புடையது. அதன்மூலம், ஒழுங்குமுறைப்படுத்தப்பட முழு வேதப்புத்தகமும் கடவுளின் வார்த்தைகள் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். வியாக்கியானம் என்பது மனிதனுடைய செயல்பாட்டிற்குத் தொடர்புடையது. அதன்மூலம், வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை முழுமையான வேத வசனங்களோடு இசைந்து, பரிசுத்தாவியின் வழிநடத்துதலின்படி கிரகித்துக்கொள்வதாகும். கிறிஸ்தவர்கள், மெய்யாகவே வேதத்தைச் சார்ந்திருப்பது என்பது அவர்கள் தங்கள் விசுவாசத்தையும், நடைமுறை வாழ்க்கையையும் வேதவசனத்தின் வெளிச்சத்தின் கீழ் தொடர்ந்து ஆராய்ந்துப் பார்ப்பதாகும்.

**வேதாகமச் சத்தியங்கள்:**

**படைப்பு:**

1. ஆணும், பெண்ணும் தேவசாயலாகப்படைக்கப்பட்டு, தேவனோடு நேரடி உறவுக்கொண்டு, இருவரும் சேர்ந்து குழந்தைகளைப் பெற்றெடுக்கவும், வளர்க்கவும் கூட்டாகப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் படைப்பின் மேல் ஆளுகைச் செய்யும் அதிகாரத்தையும் பெற்றிருந்தார்கள் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது(ஆதி1:26-28).

2. ஆணும்,பெண்ணும்முழுமையானவர்களாகவும், சேர்ந்து செயல்படுகிறவர்களாகவும் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. "உதவியாளர்" (ezer) என்கிற வார்த்தை ஆதியாகமம் 2:18-ல் பெண்ணை நியமிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டின் அதிகமான குறிப்புகளில் தேவனையேக் குறிக்கிறது(எ.கா.1சாமு7:12; சங் 121:1-2). ஆகவே, உதவியாளர் என்கிற வார்த்தை பெண் இனத்தை இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் என்றோ அல்லது தாழ்ந்தவர்கள் என்றோ ஒருபோதும் சொல்லவில்லை.

3. மனிதனிலிருந்து மனுஷியை உண்டாக்கினது மனித இனத்தின் அடிப்படையான ஒற்றுமையையும், சமத்துவத்தையும் தெளிவுப்படுத்துகிறது(ஆதி 2:21-23). ஆதியாகமம் 2:18, 20-ல் உள்ள "ஏற்ற"(kenegdo)என்ற வார்த்தை சமத்துவத்தையும், தகுதியையும் குறிக்கிறது.

4. ஆணும்,பெண்ணும் தங்களின் வீழ்ச்சிக்கு இருவரும் இணைந்து பங்குப் பெற்றவர்கள் என்று வேதம் கற்பிக்கிறது. ஆதாம், ஏவாளைக்காட்டிலும் குறைந்த குற்றமுடையவன் அல்ல(ஆதி 3:6, ரோம5:12-21; 1 கொரி15:21-22).

5. ஆதாம், ஏவாளின்மேல் ஆளுகை செய்தது அவர்களின் வீழ்ச்சியின் விளைவுதானேத் தவிர அது கடவுளின் உண்மையான படைப்பின் ஒரு பகுதியல்ல. ஆதியாகமம் 3:16 வீழ்ச்சியின் விளைவையே முன்னுரைக்கிறதேயல்லாமல் கடவுளின் உயர்வான ஒழுங்கைக் குறித்து விவரிக்கவில்லை.

**மீட்பு**

6. இயேசு கிறிஸ்து, பெண்களையும், ஆண்களையும் மீட்கவே வந்தார் என்று வேதம் போதிக்கிறது. கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தின் மூலம் நாமெல்லாரும் கடவுளுடைய பிள்ளைகளாகவும், அவருக்குள் ஒன்றாகவும், இனம், சமுதாயம் மற்றும் பாலினம் என்கிற எந்தவொரு வித்தியாசமுமில்லாமல் அவரின் இரட்சிப்பின் சந்தோஷத்தின் சுதந்திரவாளிகளாகவும் இருக்கிறோம்(யோவா1:12-13,ரோமம்8:14-17,2கொரி5:17,கலா3:26-28).

**சபை**

7. பெந்தெகோஸ்தே நாளில், பரிசுத்தாவியானவர் ஆண்களின் மேலும் பெண்களின் மேலும் ஒன்றுபோலவே வந்திறங்கினாா. எந்தவொரு வேறுபாடுமில்லாமல் பரிசுத்தாவியானவர் பெண்களுக்குள்ளும்,ஆண்களுக்குள்ளும்வாசஞ்செய்கிறார்.வரங்களையும்,ஆண்,பெண்என்றமுன்னுரிமைஇல்லாமல் எல்லோருக்கும்பகிர்ந்தளிக்கிறார்(ஆதி2:121,1கொரி12:7,11,4:31).

8. பெண்களும், ஆண்களும் தங்களின் ஆவிக்குரிய வரங்களில் வளரவும், அவைகளை தேவக்கிருபைக்கு உக்கிராணத்துவமுள்ளவர்களாகப் பயன்படுத்தவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (1பேதுரு 4:10-11). கடவுளின் அதிகாரத்திற்குட்பட்டு, கிறிஸ்துவின் முழு சரீரத்திற்கும் ஊழியம் செய்ய ஆண்களும், பெண்களும் ஆவிக்குரிய வரமுடையவர்களாகவும் மற்றும் சத்துவமுடையவர்களாகவும் இருக்கிறார்கள்(அப்1:14,18:26,21:9; ரோம 16:1-7,12-13,15; பிலி4:2-3, கொலோ4:15; மேலும் மாற்15:40-41,16:1-7, லூக்8:1-3; யோவா20:17-18; பழைய எற்பாட்டின் எடுத்துக்காட்டுகள்: நியா 4:4-14, 5:7, 2நாளா 34:22-28, நீதி31:30-31, மீகா6:4).

9. புதிய எற்பாட்டின் தொழில்சார்ந்த பொருளியலில், பெண்கள், மற்றும் ஆண்கள் இருவரும் தீர்க்கதரிசன, ஆசாரிய மற்றும் ராஜரீக வேலைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்று பரிசுத்தவேதம் நமக்குக் கற்பிக்கிறது (ஆதி 2:17-18, 21:9;1கொரி11: 5;1பேது 2:9 -10; வெளி 1:6 ,5:10). ஆகவே சில தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் பெண் சுதந்திரத்தின் முழு மீட்பைத் தடுப்பதைப்போல் தோன்றுபவைகளை நேர்மையற்ற, சாதாரணமான முறையில் மற்ற வேத வசனங்களுக்கு முரண்பாடாக வியாக்கியானம் செய்யப்படக்கூடாது. நாம் வியாக்கியானம் செய்யும்போது வேதத்தின் விஸ்தாரமான போதனைகளையும் அதன் முழு சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும். ( 1 கொரி 11:2 -16, 14:33-36;  1தீமோ 2 : 9-15).

10. ஒரு தலைமைத்துவத்தின் செயல்பாடு என்பது மற்றவர்களை ஊழியம் செய்வதற்கு ஊக்கப்படுத்துவது தானே தவிர அவர்கள்  மேல் அதிகாரம்  செலுத்துவது அல்ல ( மத் 20:25-28 ,23 :8; மாற்10: 42-45;யோவா13:13-17;  கலா 5: 13 ;1 பேதுரு 5 : 2 -3).

**குடும்பம்**

11. கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து கிருபையின் வாழ்விற்குச் சுதந்திரவாளிகளாக இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு, பரஸ்பர கீழ்படிதலோடும், பொறுப்புள்ளவர்களாகவும் வாழவேண்டும் (1கொரி7:3 -5; எபே 5:21; 1பேதுரு 3:1-7; ஆதி 21 :12). "தலையாக "(Kephale) செயல்படும் கணவனின் வேலை என்னவெனில் சுயநலமில்லாத அன்பு, பணிவிடை மற்றும் பரஸ்பர கீழ்ப்படிதலோடுங்கூடிய உறவுமுறை என்பதை நாம் அறிய வேண்டும் ( எபே 5 : 21-33, கொலோ 3:19˙, 1 பேதுரு 3 :7).

12. தாயும், தகப்பனும் இணைந்து தங்களின் குழந்தைகளை வளர்க்கவும், பயிற்சியளிக்கவும், ஒழுங்குப்படுத்தவும், கறப்பிக்கவும் தங்களின் தலைமைத்துவத்தைக் கையாள வேண்டும் (யாத் 20:12; லேவி 9 :3 ; உபா 6 : 6- 9 , 21 : 18 - 21, 27:16 ; நீதி 1: 8 ; 6 : 20 ; எபே 6 : 1 - 4 ; கொலோ 3 : 20 ; 2 தீமோ 1 : 5 ; மேலும் லூக் 2 : 51)

**நடைமுறைப்படுத்துதல்**

**சபை**

1. தேவ சபையில் , பெண்கள் மற்றும் ஆண்களின் ஆவிக்குரிய வரங்களை அங்கீகரித்து, வளர்த்து, பணி செய்யவும், மற்றும் கற்பிக்கும் ஊழியத்தின் எல்லா ஈடுபாடுகளாகிய சிறுக்குழுத்தலைவர்கள், ஆலோசகர்கள், ஊக்கப்படுத்துகிறவர்கள், நிர்வாகிகள், துணையாளர்கள், திருவிருந்துப் பந்தியின் உதவியாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள், மற்றும் மேய்ப்பர் ஊழியம், கற்பித்தல், போதித்தல், ஆராதனை நடத்துதல் போன்றவற்றில் அவர்களைப் பயன்படுத்த வேண்டும்.

அப்படிச் செய்யும்போது, சபையானது கடவுளை ஆவிக்குரிய வரங்களின் காரணர் என்று மகிமைப்படுத்தும். சபையானது தேவராஜ்ஜியத்திற்கு எந்தவொரு இழப்பும் ஏற்படாமல் தேவன் வகுத்துள்ள உக்கிராணத்துவத்தை நிறைவேற்றும். அது தங்கள் பொறுப்புகளிலிருந்து வெளியேத் தள்ளப்பட்டிருக்கின்ற சபைமக்களின் பாதி உறுப்பினர்களின் வாழ்க்கையில் நல்லதொரு விளைவை ஏற்படுத்தும்.

2. தேவ சபையில், பெண்களும், ஆண்களும் ஊழியம் செய்யவும், தலைமைப் பொறுப்பிலிருக்கவும் அவர்களுக்கு வெளிப்படையான அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

அப்படிச் செய்யும்போது, சபையானது ஒற்றுமைக்கும், இசைந்து போகுதலுக்கும் மாதிரியாக இருந்து, சபை மக்களின் குணநலங்களைச் சீரமைக்கும். வேற்றுமை மற்றும் பிரிவினைகளால் முறிந்து கிடக்கின்ற இந்த உலகத்தில், உலக மக்களின் சூழ்ச்சியால் வடிவமைக்கப்பட்ட பெண்ணாகப் பிறந்ததற்காக பெண்கள் எல்லோரும் தங்களை தாழ்ந்தவர்கள் என்று எண்ண வைக்கிற அந்த அமைப்பிலிருந்து சபையானது விலகியிருக்கும். அது பெண்கள் சபையின் தொடர்பை விட்டு வெளியேப் போவதைத் தடுக்கும் அல்லது அவர்களின் கிறிஸ்துவ விசுவாசப் புறக்கணிப்பிலிருந்து அவர்களைக் காக்கும்.

**குடும்பம்**

3. கிறிஸ்துவக் குடும்பத்தில், கணவனும், மனைவியும் தனிப்பட்ட முறையில் அவர்களின் முக்கியத்துவம், விருப்பம் மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதில் இருவரும் வித்தியாசப்பட்டிருப்பார்கள். ஒருவர் மற்றொருவர் மேல் ஆதிக்கம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் ஒருவர் மற்றவருக்கு ஒரு வேலைக்காரரைப் போலவும், தாழ்மையாகவும் இருந்து, தன்னைக் காட்டிலும் மற்றவரை உயர்ந்தவராக எண்ண வேண்டும். முக்கியத்

தீர்மானங்கள் எடுக்கும்போதுவேதமுறைமையின்படி எடுக்கவேண்டுமேயன்றி ஒருவர் மற்றவர்மேல் தன் தீர்மானத்தைத் திணிக்ககூடாது.

அப்படிச் செய்யும்போது, கணவனும், மனைவியும் ஒரு கிறிஸ்துவக் குடும்பத்தை அதிகாரத்துர்ப்பிரயோகத்திற்கும், ஆளுகை செய்யும் தன்மைக்கும் விலகியிருக்க உதவி செய்வார்கள். மேலும்,சில சமயங்களில் கணவனின் "முதன்மைத்துவம்" என்கிற சமய அமைப்பின் வியாக்கியானம் தொடர்வதால் அது மனைவி மற்றும் குழந்தையை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து குடும்பத்தைப் பாதுகாக்கும்.

4. கிறிஸ்தவக் குடும்பத்தில், வாழ்க்கைத்துணைகள் அவர்களின் தலைமைத்துவப் பொறுப்புகளை தாலந்து, நுண்ணறிவு மற்றும் செயல் ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் எடுக்கும் தீர்மானத்தினால் அதிகமாய் பாதிக்கப்படுகிற துணையை தன் கருத்தில் கொண்டு உரிய மரியாதையோடுப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

அப்படிச் செய்யும்போது, வாழ்க்கைத்துணைகள் அவர்களின் திறமைகளையும், நிறைவையும் மதிக்கக் கற்றுக் கொள்ளுவர்கள். இது அதிகபடியாக, தன்னுடைய சுய மரியாதையைக் காத்துக் கொள்ள உகந்த செயல்களையோ அல்லது ஏமாற்றுத்தனமான தகாத விதத்தை கையாளவோ தள்ளப்படுகிற ஒரு துணைவரை நெடுங்காலப் பிரிவிலிருந்து தடுக்கும். அவர்களின் திருமணம் பங்குதாரர்களின் அடிப்படையில் அமைவதால், தம்பதிகள் அதனை தங்கள் மரணக் காலத்தில் இணைவதிலிருந்தோ அல்லது வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளால் ஏற்படும் திருமண முறிவிலிருந்தோ அவர்களைக் காப்பாற்றும்.

5. கிறிஸ்துவக் குடும்பத்தில், வாழ்க்கைத்துணைகள் எந்தவொரு குற்ற மனசாட்சியின் எண்ணமுமில்லாமல் அல்லது மாய்மாலத்திற்குள் திரும்பாமல் கிறிஸ்துவுக்குள் அவர்கள் கண்டடைந்த விடுதலையால் அவர்கள் வாழ்க்கைமுறையில் பண்பினை பகிர்ந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் வேதத்திற்குப் புறம்பான "பாரம்பரியம்" என்ற கட்டிலிருந்து விடுதலையாகி, எழும்பி கிறிஸ்துவுக்குள் அவர்களின் பரஸ்பர கணக்கொப்பிவித்தலில் சந்தோஷமாய் இருக்கலாம்.

அப்படிச் செய்யும்போது, அவர்கள் வேதத்திற்குக் கீழ்ப்படிதலை வெளிப்படையாகக் காட்டுவார்கள். மற்ற தம்பதிகளுக்கும் கிறிஸ்துவுக்குள் உண்டாகும் விடுதலையின் மேல் தாகம் ஏற்பட முன்மாதிரியாக இருப்பார்கள். மேலும் அவர்கள், சில சமயங்களில் சபையின் மேலும் குடும்பத்தின் மேலும் திணிக்கப்படுகின்ற ஆளுகை செய்யும் முறைமையிலிருந்தும், சமத்துவமின்மையிலிருந்தும் விலகி நிற்பார்கள்.

இந்த ஆவணத்தில் பிரதிபலிக்கப்பட்டிருக்கிற வேதாகமச் சமத்துவம் என்பது வேதத்தின்சத்தியம் என்று விசுவாசிக்கிறோம்.

வேதாகமம், அதன் முழுமைத்தன்மையில் விடுதலையாக்கும் வார்த்தை என்றும், பெண்களும், ஆண்களும் பரிசுத்தாவியினால் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட வரங்களை தேவ ஊழியத்தை செய்ய அது அதிகப்பயனுள்ள வழியைக்காட்டுகிறது என்று நாங்கள் இணைந்து அறிக்கையிடுகிறோம்.

**Christians for Biblical Equality**
122 West Franklin Avenue, Suite 610,
Minneapolis, MN 55404-2426
Phone: **(612) 872-6898**
Email: **cbe@cbeinternational.org**
**www.cbeinternational.org**